# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.259/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.3 |
| Name | : | . நளினி |
| Father's Name | : | . க.பெ.இளங்கோவன் |
| Village | : | . சக்தி நகர், மொளப்பட்டு கிராமம் |
| Taluk | : | . வந்தவாசி |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : . | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 11.08.2025.

1, 3, 4, 6 எதிரிகள் ஆஜர். 2, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமியார்ஆவார். அ.சா.2 எனது கணவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் பக்கத்து கழனியை சேர்ந்தவர்கள். 27.04.2016ம் தேதி காலையில் எங்கள் கழனியல் நடவு நட்டுக்கொண்டிருந்தோம். அப்போது 1ம் எதிரி எங்கள் கழனியின்

வரப்பை வெட்டிக்கொண்டிருந்தார். அதனை எனது மாமியார், எனது கணவர் மற்றும் நானும் சென்றுகேட்டோம். அப்போது 1ம் எதிரியும், அவரது மகன்களும் தடியால் எங்களை அடித்தார்கள். 1ம் எதிரியின் மைத்துனர் சைக்கிள் செயில் எடுத்துவந்து என்னை அடித்தார். 3ம் எதிரி ஜீவாவின் மைத்துனர் நாராயணமூர்த்தி என்பவர் என்னை வயிற்றில் எட்டி உதைத்தார். அப்போது எங்கள் கழனியில் நடவு நடவந்தவர்கள் வந்து சண்டையை மடக்கினார்கள். பின்னர் எதிரிகள் ஆபாசமாக திட்டிக்கொண்டே உங்களை விடுவதாக இல்லை என்று சொல்லிக்கொண்டே சென்றுவிட்டார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் வெட்டியதாக சொல்லப்படும் வரப்பு எங்களது கழனியின் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் எதிரிகள் அவரது கழனியில் பயிர் ஏதும் செய்திருந்தார்களா என்றால் இல்லை. எந்தவித பயிறும் செய்யப்படாத சூழ்நிலையில் எதிரிகள் வரப்பை ஏன் வெட்டினார்கள் என்றால் அது எங்களது கழனி அதனை அளப்பதற்கு மணியக்காரர் வருவதாக சொன்னதால் வரப்பை வெட்டினார்கள். எனது கணவர் எங்களுக்கும் எதிரிகளுக்கும் பொதுவாக உள்ள வரப்பை ஜெ.சி.பி வைத்து சமன் செய்ததாக கூறியிருந்தால் அது தவறு. எனது கணவர் செய்த தவறினால்தான் எதிரிகள் அவரது கழனியை காப்பாற்றவேண்டி வரப்பை சரி செய்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் எங்களது கழனியின் வரப்பைதான் சரி செய்தார். எதிரிகளுக்கும், எங்களுக்கும் கழனி சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். இது சம்மந்தமாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடைய உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறதா என்றால் சரிதான். எனது மைத்துனர் அரசியல் கட்சியில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் சொல்லும் கழனி எங்களுக்கு சொந்தமாக இருந்திருந்தால் அதன் சர்வே எண் தெரிந்திருக்கும். அது எதிரியின் கழனி என்பதால் சர்வே எண் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் மிகவும் ஏழ்மையானவர்கள் என்பதால் அவர்களிடமிருந்து செல்வாக்கு மிக்க நாங்கள் அபகரிக்க எதிரிகள்மீது பொய்யாக வழக்கு தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்மபத்தன்று நாங்கள் எதிரிகளை தாக்கியதாக எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது நாங்கள் கொடுத்த புகாருக்கு எதிராக கொடுத்திருக்கலாம். எதிரிகள் நாங்கள் சொல்வதுபோல் தாக்கியிருந்தால் தாக்குவதற்கு பயன்படுத்திய பொருட்களை போலிசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியிருப்பார்கள் என்றால் சரியல்ல. எனது மாமியார் கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் வழக்கில் பாதிக்கப்பட்டுள்ளேன். எதிரிகள் இவ்வழக்கில் குற்றவாளி இல்லை என்றால் சரியல்ல. நாங்கள்தான் எதிரிகள் நிலத்தில் அத்துமீறி நடந்தோம் என்றால் சரியல்ல.